# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இலங்கையின் விமான நிலைய முகாமையாளர்களுக்கு இந்தியாவில் ஆளுமை விருத்தி செயல்திட்டம்</u>**

இலங்கை விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் தனியார் வரையறுக்கப்பட்ட (AASL) நிறுவனத்தின் 10 விமான நிலைய முகாமையாளர்கள் 2026 மார்ச் 9 முதல் 20 வரை இந்தியாவின் புதுடில்லியில் உள்ள இந்திய விமான சேவைகள் அக்கடமியில் (IAA) நடைபெற்ற ஒரு விசேட ஆளுமை விருத்தி பயிற்சித் திட்டத்தினை பூர்த்திசெய்துள்ளனர்.

2. AASL இலங்கையில் சிவில் விமான நிலையங்களை நிர்வகிக்கவும் அபிவிருத்தி செய்வதற்குமான அதிகாரத்தைக் கொண்ட நிறுவனமாகும். சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு பணியகம், சிவில் விமானப் போக்குவரத்து பணியகம், இந்திய விமான நிலைய ஆணையம் ஆகியவற்றின் கூட்டு பயிற்சி மையமாக செயல்படும் IAA விமானப்போக்குவரத்து துறை சார்ந்த கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சியில் முதன்மைவாய்ந்த நிறுவனமாக செயல்படுகின்றது. ICAO TRAINAIR PLUS திட்டத்தின் முழுமையான அங்கத்தவரான IAA, விமானப் போக்குவரத்து துறையின் சகல கோணங்களிலும் அனுபவரீதியான கற்றல்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றது.

3. இந்த இருவார கால பயிற்சித் திட்டமானது, பயண முனையச் செயற்பாடுகள், பயணிகள் முனையத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், விமான நிலையத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்; விமான நிலைய கட்டுப்பாட்டு பகுதிகளை நிர்வகிப்பதற்கான உத்திகள்; விமான போக்குவரத்து முகாமைத்துவம், பயணிகள் வசதிகள்; விமான சேவைகளின் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல்; விமான மீட்பு மற்றும் உபகரணங்கள்; நெருக்கடி நிலை முகாமைத்துவம் மற்றும் அவசரநிலை, நீடித்த வர்த்தகத்துக்கான திட்டமிடல் உள்ளிட்ட விமானப் போக்குவரத்துத் துறையின் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

4. இந்தியா இலங்கை இடையில் தற்போது நடைபெற்றுவரும் இருதரப்பு ஆளுமை விருத்தி செயல்திட்ட ஒத்துழைப்பு கட்டமைப்பின்கீழ் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது. அத்துடன் 2025 ஏப்ரலில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்த மாண்புமிகு இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கை அதிகாரிகளுக்கான மேம்பட்ட ஆளுமை விருத்தி செயல்திட்டத்துக்காக 700 தனிப்பயனாக்கப்பட்ட ஆசனங்களை வருடாந்தம் ஒதுக்குவதாக அறிவித்த செயல்திட்டத்தின் மூலம் இந்த

ஒத்துழைப்பு மேலும் மேம்படுத்தப்பட்டது. இத்திட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் 2024 டிசம்பரில் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இந்தியாவின் நல்லாட்சிக்கான தேசிய நிலையம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் வருடாந்தம் இலங்கையின் 300 சிவில் சேவை அதிகாரிகள் இவ்வாறான பயிற்சிகளைப் பெறுகின்றனர்.

*******

கொழும்பு<br>
21 மார்ச் 2026